<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 260/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கலா | நாள் | 15.06.2023 |
| தகப்பனார் பெயர் | கணேசன் | | |

<u>**2ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 –ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**</u>

56) என் பாட்டி சின்னம்மாளே என் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் அமலுக்கு வரவில்லை என்பதால் அதை ரத்து செய்து பதிவு செய்துள்ளார் என்பதை மேற்படி ஆவணம் ரத்து செய்யப்பட்ட விவரம் குறித்து நான் தெரிந்து கொண்டேனா என்றால், இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புதான் எனக்கு தெரியும்.

57) அவ்வாறு மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு எப்போது முதன் முதலில் தெரிய வந்தது என்றால், இன்றைய தேதியிலிருந்து சுமார் 4 வருடங்களுக்கு முன்பும், 5 வருடங்களுக்குள்ளும் தான் எனக்கு தெரியும். அப்போது நல்லதம்பி என்னிடம் சொத்தை கிரயம் கேட்டபோது தான் பரஞ்சோதி என் பெயரில் சொத்து இல்லை. அதை விற்க கூடாதென கூறிய சமயத்தில்தான் எனக்கு தெரிய வந்தது.

58) இவ்வழக்கு 2015ம் வருடத்தில் தாக்கல் செய்துள்ள நிலையில் நான் தற்போதிலிருந்து 4, 5 வருடங்களுக்குள் தெரியும் என சொல்வது பொய்யானது என்றால், சரியல்ல. 2ம் பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கில் 11.08.2016ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையிலேயே என் பெயரிலுள்ள கிரய பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டதாக கூறியுள்ள நிலையில் நான் தற்போது 4 வருடங்களுக்கு முன்புதான் அது எனக்கே தெரிய வந்ததாக சொல்வது ஏற்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

59) சின்னம்மாள் என் பெயரில் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை 1995ம் வருடம் ரத்து செய்த விவரம் எனக்கு அப்போதே தெரியும் என்றாலும், மேற்படி விவரங்களை தெரிந்து கொண்டு இவ்வழக்கிற்காக எனக்கு என் பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு 4, 5 வருடங்களுக்கு

முன்பு தான் தெரியும் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

60) என் வழக்குரையில் எந்த தேதியில் எந்த வருடத்தில் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரிய வந்தது என குறிப்பாக நான் சொல்லியுள்ளேனா என்றால், தற்போது அந்த விவரம் எனக்கு சரியாக நினைவில்லை.

61) என் பாட்டி சின்னம்மாள் எப்போது இறந்தார் என்றால், தேதி சரியாக நினைவில்லை. ஆனால் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு அவர் இறந்துவிட்டார். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் எத்தனை நாட்களுக்கு முன்பு என் பாட்டி சின்னம்மாள் இறந்தார் என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சுமார் 15 வருடங்களுக்கு முன்பு அவர் இறந்துவிட்டார்.

62) என் பாட்டி சின்னம்மாள் 2001ம் வருடம் இறந்துவிட்டார் என்ற சங்கதியை என்னால் மறுக்க முடியுமா என்றால், எனக்கு வருடம் சரியாக தெரியாது. என் பாட்டி சின்னம்மாள் இறந்ததற்கு இறப்பு சான்றிதழ் ஏதும் இந்நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரியாக நினைவில்லை.

63) என் பாட்டி சின்னம்மாள் 2001ம் வருடம் இறந்ததற்கு பின் அவர் என் பெயரில் எழுதிய தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை 1995ம் வருடத்தில் ரத்து செய்த ஆவணத்தை ஏறத்தாழ 20 வருடங்கள் கழித்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்தவரே இறந்துவிட்டதால் அதுகுறித்து தற்போது நான் எந்த கேள்வியும் கேட்க இயலாது என்றால், சரியல்ல.

64) பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி சங்கதிகள் குறித்து குறிப்பாக தெரிவித்து பதிலுரை தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்படி பதிலுரைக்கு என் தரப்பில் எவ்வித மறுப்புரையும் நான் தெரிவிக்கவில்லை என்றால், அதுகுறித்து எனக்கு சரியாக நினைவில்லை.

65) 2015ம் வருடத்தில் தாவா சொத்து வருவாய் துறை ஆவணங்களில் யார் பெயரில் இருந்தது என்றால், என் பெயரில்தான் இருந்தது. தற்போது இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 பட்டா எப்போது வாங்கப்பட்டது என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு வாங்கப்பட்டது.

66) இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழை நான் எப்போது நான் பெற்றேன் என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் பெற்றதாக நினைக்கிறேன். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் ரத்து நகலை, வில்லங்க சான்றிதழை பெறுவதற்கு முன்பே பெற்றேனா அல்லது அதற்கு பின்புதான் பெற்றேனா என்றால், எந்த தேதியில் பெற்றேன் என எனக்கு சரியாக நினைவில்லை.

67) மேற்படி சங்கதிகள் எனக்கு நன்கு தெரிந்திருந்தும், அவை குறித்து தற்போது எனக்கு தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.9 ஆகிய கூட்டுப்பட்டாக்களில் எந்த வருடத்தில் என் பெயர் சேர்க்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது.

68) வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு தாவா சொத்திற்குரிய பட்டா எண் மாறியுள்ளதா அல்லது அதே பட்டா எண்ணா என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 பட்டாவில் யாருடைய பெயர்கள் இருந்தது என நான் தெரிந்து கொண்டேனா என்றால், நான் அதை பரிசீலனை செய்யவில்லை. இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு நான் முன்னிலைப்படுத்திய வா.சா.ஆ.9 பட்டாவில் மேற்படி வா.சா.ஆ.2 பட்டாவில் இருந்த அதே பெயர்கள் தான் இடம் பெற்றுள்ளதா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

69) இவ்வழக்கில் மேற்படி ரத்து பத்திரத்தின் நகலை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால், சரியாக நினைவில்லை. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.9 ஆகிய பட்டாக்கள் என் செல்வாக்கால் வருவாய் துறை அதிகாரிகளின் மூலம் நான் பெற்றுள்ளேன் என்பதால் அவை செல்லாதவை என்றால், அது பொய்யானது.

70) வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.9 ஆகிய பட்டாக்களில் உள்ள சர்வே எண்களுக்கும், தற்போது இவ்வழக்கு சொத்தின் சர்வே எண்ணிற்கும் முரண்பாடு உள்ளதால் நான் எந்த சொத்திற்காக வழக்கு நடத்துகிறேன் என தெரியாமல் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால், சரியல்ல.

71) என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.3 கந்தாய ரசீது என்னால் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்பதால்தான் அது பூர்த்தி செய்யப்படாமல் முழுமையற்றதாக உள்ளது என்றால், சரியல்ல. தாவா சொத்தை பொறுத்தவரை இவ்வழக்கில் நான் 1/3 பங்கு கோரி பாகபிரிவினை மட்டுமே கோர இயலும் என்றாலும், தற்போது இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கக் கூடியதல்ல என்றாலும், சரியல்ல.

72) பரஞ்சோதி, சின்னம்மாளின் மகள் ஆவார். சின்னம்மாளை பராமரித்தும், அவர் இறப்பிற்கு பின்பும் தாவா சொத்தை பரஞ்சோதிதான் இன்று வரை பராமரித்து வருகிறார் என்றால், அது தவறானது. நாங்கள் யாரும் சின்னம்மாளை பராமரிக்காமல் வெளியூருக்கு சென்றுவிட்ட நிலையில், தற்போது 1ம் பிரதிவாதி மற்றும் நல்லதம்பியும் சேர்ந்து என்னை தூண்டி விட்டு அதன் பெயரில் தாவா சொத்தை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் தற்போது பொய்யாக ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

73) இவ்வழக்கில் நான் விளம்புகை பரிகாரம் கோராமல் பரஞ்சோதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரவும் எனக்கு உரிமையில்லை என்றால், சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த தேதியில், வழக்கு சொத்தின் சந்தை மதிப்பு சுமார் 15 லட்சத்திற்கு போகும். இன்றைய தேதியில் சுமார் 60 லட்சம் போகும்.

74) பதிலுரையில் 2ம் பிரதிவாதி சொத்தின் மதிப்பு எவ்வளவு என கூறியுள்ளார் என்றால், எனக்கு அதுகுறித்து தெரியாது. நல்லத்தம்பியுடன் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் விற்பதாக கூறி எவ்வளவு தொகைக்கு பேசினேன் என்றால், 10 லட்சத்திற்கு விற்பாக பேசி ரூ.10 ஆயிரத்தை முன் பணமாக பெற்றேன். அவ்வாறு

மேற்படி ரூ.10 லட்சம் விலைபேசி முன் பணம் வாங்கிய சங்கதிகளை என் வழக்குரையில் நான் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன்.

75) தாவா சொத்தின் மதிப்பை குறைத்து காட்டி முறையாக நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் நான் ஏமாற்றியுள்ளேன் என்றால், சரியல்ல. ரத்து பத்திரத்திற்கு நான் கோரியுள்ள பரிகாரத்திற்கான நீதிமன்ற கட்டணம் குறைவாக உள்ளது என்றால், சரியல்ல.

76) ரத்து பத்திரத்தை நான் என் தரப்பு ஆவணமாக குறியீடு செய்யாததால் இவ்வழக்கில் எந்த பரிகாரமும் நான் பெறமுடியாது என்றால், சரியல்ல. சொத்தின் சுவாதீனம் குறித்து மேற்படி ரத்து பத்திரத்தில் கூறியுள்ளதால்தான் இவ்வழக்கில் அதை நான் குறியீடு செய்யவில்லை என்றால், சரியல்ல. இவ்வழக்கிற்கான வழக்கு மூலம் கற்பனையானது என்றால், சரியல்ல.

77) வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரம் தவறானது என்றாலும், மேற்படி சொத்து விவரம் என் ஆவணத்திற்கு முரணாக உள்ளதாக என்றாலும், மேற்படி காரணத்தினால் நான் தவறான சொத்து விவரத்தின் அடிப்படையில் எந்த பரிகாரமும் அருகதையற்றவர் என்றால், சரியல்ல.

78) தாவா சொத்தில் எனக்கு பூரண உரிமையில்லை என்பதை தெரிந்து மேற்படி சங்கதிகளை மறைத்து இவ்வழக்கை நான் கூட்டு உரிமையாளர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

79) இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கில் எனக்குள்ள உரிமையை அளிக்கக் கூடியதல்ல என்பதால், இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.